ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2186/32 - 2020 ජූලි මස 31 වැනි සිකුරාදා - 2020.07.31

*2186/32 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ் அட்டவணையின் II ஆம் நிரலில் உள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*இக்கட்டளை, 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் 03 மாத காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கட்டளை இடப்பட்டு 2020.05.07 ஆந் திகதிய 2174/7 ஆம் இலக்க அதிவிசேட வரத்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டவை, 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி முதல் பயன் வலுப்பெறுமாறு இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.*

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, யூலை 31.*

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ.மு. தலைப்பு | இ.மு. குறியீடு | விவரணம் | |
| 1 | 03.05 | 0305.54.10 | நெத்தலிகள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 1.00 |
| 2 | | 0305.52.00<br>0305.53.00<br>0305.54.90<br>0305.59.30<br>0305.59.90 | உலர்த்திய மீன் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 52.00 |
| 3 | 07.03 | 0703.10.20 | பெரிய வெங்காயங்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 50.00 |
| 4 | 07.13 | 0713.31.19 | பிற - பச்சைக் கடலை (பாசிப்பயறு) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 40.00 |
| 5 | 08.04 | 0804.50.50 | மங்குஸ்தான் பழங்கள், சோர்வற்ற புதிய | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200.00 |
| | | 0804.50.60 | மங்குஸ்தான் பழங்கள், சாறு இல்லாத காய்ந்த | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200.00 |
| 6 | 08.10 | 0810.50 | கிவி பழம் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 175.00 |
| 7 | | 0810.90.90 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200.00 |

08-386

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.